[2007 அக்டோபர் 19

16—

எரிவாயு சிலிண்டர்

***28859—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகள் மூலமாக எரிவாயு சிலிண்டர் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நியாய விலைக் கடைகள் மூலமாக எரிவாயு சிலிண்டர் வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எரிவாயுப் பயன்பாடு என்பது மிகவும் அதிகமாக அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக, நம்முடைய முத்தமிழ் அறிஞர் தலைமையிலான அரசு அறிவித்திருக்கின்ற இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் அந்தத் திட்டத்தின் காரணமாக இதுவரை புகை அடுப்பால் துயரப்பட்டுக் கொண்டிருந்த பெண்கள் எல்லாம் எரிவாயுவைப் பயன்படுத்துகின்ற ஒரு நல்ல சூழல் உருவாகி இருக்கிறது. அடுத்த ஆண்டிலே கூடுதலாக [illegible] இலட்சம் இலவச எரிவாயு இணைப்புகளைக் கொடுப்பதற்காக, நம்முடைய துணை மதிப்பீடுகளிலே 60 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஊரகப் பகுதிகளிலே எரிவாயுப் பயன்பாடு என்பது அதிகரிக்கின்ற இந்த நேரத்திலே, அதைக் கொடுக்கின்ற ஏஜென்சிகள் அதற்குக் கூடுதலாகப் பணம் கேட்கிறார்கள் ஏனென்று சொன்னால், ஊரகப் பகுதிகளிலே கொண்டு வந்து சிலிண்டரை சப்ளை செய்வதற்குக் கூடுதலாக அந்த மக்களிடத்திலே பணம் கேட்கிறார்கள். நகரப் பகுதியிலேகூட 50 ரூபாய் வரை அப்படி வாங்குகிறார்கள். அது மட்டுமல்லாமல், அந்த ஏஜென்சிகள் வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு சிலிண்டர்களை ஓட்டல் முதலான நிறுவனங்களுக்குத் திருப்பி விடுகின்ற காரணத்தினாலே, எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டைச் செயற்கையாக உருவாக்கி, மக்களிடத்திலே

2007 அக்டோபர் 19]

ஓர் அதிருப்தியையும் இன்றைக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைக் களைவதற்காகத்தான் நம்முடைய அரசு நியாய விலைக் கடைகள் மூலமாக இந்த எரிவாயு சிலிண்டர்களை வழங்குமேயானால், அது ஊரகப் பகுதிகளுக்குக் கிடைப்பதற்கு வழி ஏற்படும். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு இலவசமாக நம்முடைய அரசின் கருணை உள்ளத்தால் எரிவாயு இணைப்பைப் பெற்ற ஏழை மக்கள், அந்த சிலிண்டர்களுக்குக் கூடுதலாகப் பணம் கொடுக்க வேண்டிய ஓர் அவல நிலையும் தவிர்க்கப்படும். இதை அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள், இந்த ஆண்டு கூடுதலாக 3 இலட்சம் இலவச அடுப்புகள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 8 இலட்சம் அடுப்புகள் வழங்குவதற்காக ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளை எல்லாம் இந்த அரசு எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. இது ஒன்று. ஏற்கெனவே இருக்கிற எரிவாயு இணைப்பு என்கிற வகையிலே, 10 கிலோ மீட்டர் தூரம் வரை கொடுக்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்த 10 கிலோ மீட்டர் வரை எந்தவிதமான கூடுதல் கட்டணமும் பெறக் கூடாது என்று அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே, தமிழ்நாட்டிலே இந்த இலவச எரிவாயு அடுப்புகள் எல்லாம் கிராமப் பகுதிகளுக்குப் போகிற காரணத்தினால், அங்கு ஏற்கெனவே இருக்கிற ஏஜென்சிகள், தனியாருடைய ஏஜென்சிகள் எல்லாம் முறையாக 30 கிலோ மீட்டர் தூரம், 35 கிலோ மீட்டர் தூரம் எல்லாம் போக முடியாது என்பதை அரசு அறிந்த காரணத்தினால்தான்—இன்னும்கூட சொல்லப் போனால், சில தொகுதிகளின் தலைமை இடம் என்கிற இடத்தில்கூட இந்த ஏஜென்சிகள் எல்லாம் இல்லை; நான் பிறந்த எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்கூட, பெரணமல்லூர் தொகுதி என்ற ஒரு தொகுதியே இருக்கிறது; அங்கு ஏஜென்சி இல்லை; இந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கிற என்னுடைய ஊருக்குக்கூட அந்த ஏஜென்சி இல்லை—இப்படித் தமிழ்நாட்டிலே பல இடங்களிலே கண்டறிந்து, 69 இடங்களிலே ஏஜென்சிகள் இல்லை என்பதைக் கண்டறிந்து முதலமைச்சரிடத்திலே

சொன்னபொழுது, நேரடியாக அவற்றை எல்லாம் நுகர்வோர் வாணிபக் கழகத்தின் மூலமாக அல்லது வேறுவாக இருக்கிற கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக நடத்தலாம் என்று அவர்கள் அறிவுரை சொன்னதன்பேரில், நேரடியாக 12-6-2007 அன்று மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதினோம். "69 இடங்களுக்கு நீங்கள் ஏஜென்சி வழங்க வேண்டும் அரசுக்கு" என்று நாங்கள் கடிதம் எழுதி இருக்கிறோம். அதோடு மட்டுமல்ல; 8-10-2007 அன்று நேரடியாகச் சென்று, மாண்புமிகு திரு. முரளி தியோரா அவர்களைச் சந்தித்து, "69 இடங்களில் இந்த ஏஜென்சிகளைக் கொடுப்பதன் மூலமாகத்தான் இந்தத் திட்டம் முழுமையாக கிராமங்களுக்குப் போய்ச் சேரும்" என்றும் சொல்லி இருக்கிறோம். அப்பொழுது உடனிருந்த மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ராஜா அவர்களும்கூட விளக்கிச் சொன்னார்கள். அவற்றை உடனடியாக அனுமதிக்கக் கொடுக்கலாம் என்ற ஓர் உத்தரவாதத்தை அளித்திருக்கிறார்கள். அவை வருகிறபொழுது, கழக அரசின் சார்பாகத் தலைவர் அறிவித்த சிறப்புத் திட்டம் முறையாக வந்து சேர்வதற்கு இந்த அரசு வேகமாக முயற்சிகள் எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

Gas தட்டுப்பாடு என்று சொன்னார்கள். Gas தட்டுப்பாடு என்பதையும், Cylinder-கள் எல்லாம் சில நேரங்களில் Hotel-களுக்குப் போகின்றன என்பதையும் தடுப்பதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. ஆனால் எண்ணெய்க் கழகங்கள் மூலமாகக் கண்காணிப்பதற்குத்தான் மைய அரசு அந்த அதிகாரத்தை வைத்திருக்கிறது. ஆனால் நாம் உடனுக்குடன் அப்பொழுதைக்கப்பொழுது கடிதம் எழுதிக்கொண்டிருக்கின்றோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே மாநில அதிகாரிகள் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். தொடர்ந்து அதைப்பற்றிப் பேசி, தட்டுப்பாடு இல்லாத அளவிற்கு, இயன்ற அளவிற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

திரு. து. ரவிக்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற உறுதிமொழிக்கு மிகவும் நன்றி.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அதே சமயத்திலே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாக அந்த Gas Cylinder-களை supply செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்ற இந்த நேரத்திலே, தமிழகத்திலே உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் அதை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரவிக்குமார், short ஆகக் கேளுங்கள். Supplementary question இது. கேட்பதைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. து. ரவிக்குமார்: மகளிர் சுய உதவிக் குழுக்கள் அந்த Gas Agency-களை எடுத்து நடத்த முன்வந்தால், அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்பதையும் உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Gas Agency எடுக்க வேண்டுமென்று சொன்னால் அது private-ஆக இருந்தாலும், அரசாங்கமாக இருந்தாலும் அதற்கென சில விதிகள் இருக்கின்றன. அதற்கு godown தேவை; அவற்றை display செய்வதற்காக ஒரு தனி அறை தேவை; இப்படியெல்லாம் விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின் பிரகாரம்தான் ஓர் அரசாங்கம் செய்ய முடியும். அவற்றை எடுத்துக்கொண்டு கிராமப் பகுதிகளுக்குப் போகிறபோது, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக அவற்றை அனுப்ப முடியுமா என்பதை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அதையும் முறைப்படுத்துவதற்கு இந்த அரசு மேற்கொண்டு முயற்சி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

17—

திருப்பணி

***24218—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—